# மன்னாரில் இளைஞர்கள் காணாமல்போகின்றனர்

## படைகளே காரணம்

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மன்னார் பகுதியில் தமிழ் இளைஞர் கற்போது அடிக்கடி காணாமல் போவதாகவும் இவர்கள் பற்றிய விபரங்கள் வெளிவராமல் இருப்பதில் இராணுவத்தினரும், பொலிஸாரும் மிகவும் அவதானமாக நடந்துவருவதாகவும், அகதி (4-ம் பக்கம் பார்க்க)

PUBLIC LIBRARY
JAFFNA

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 31 இதழ் 62
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-4-1994

## விசுவமடுவில் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் விசுவமடுப்பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் குண்டு வீச்சு விமானங்கள் கடும் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்றுமுன்தினம் மாலை 4-30 மணியளவில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இத்தாக்குதல்களை மேற்கொண்டன. இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி தெரியவரவில்லை. (ரி)

# எதிர்வரும் இரு தேர்தல்களிலும்

# ஆளும் ஐ.தே.க. தோல்வியுறும்!

### அரசின் இரகசிய வேவுக்குழு தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சி நிச்சயமாகத் தோல்வியைத் தழுவிக்கொள்ளும் என அரசின் 'இரகசிய வேவுகுழு' தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி வாய்ப்புக்கள் பற்றி ஆராய்வதற்காக அரசினால் நியமிக்கப்பட்டதே இந்த வேவுக் குழு என்பது ஆளும் கட்சிக்காரால் குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் நடந்து முடிந்த தென்மாகாண சபைத் தேர்தலில் ஆளும் இந்த ஐ. தே. க. படுதோல்வி படைத்தது தெரிந்ததே. இந்தத் தேர்தல் குறித்தும் வெற்றி வாய்ப்புக்களை ஆராய் (4-ம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவு தாக்குதலில் இராணுவ சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமின் முன்னணி நிலைகள் மீது கடந்த வெள்ளியன்று விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசிய கட்சிக்குள் பெரும் அதிகார இழுபறி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் நிலவும் அதிகார இழுபறி இப்போது மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திரு. காமினி திஸாநாயக்க கட்சித்தலைவரின் இந்த காலை நாடாளுமன்ற அங்கத்தவராக சேர்த்துக்கொள்வதற்கு கட்சியின் உயர்மட்டத்தினர் மேற்கொண்ட முயற்சி படுதோல்வியில் முடிவுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக [illegible] வழங்குவதற்காக கட்சியின் பொதுச்செயலர் சிறிசேன குரே வெளிநாட்டுப் பயணம் ஒன்றையே மேற்கொண்டிருந்தார்.

இக்காரணமாக அவரைக் (4-ம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பு எதிரொலி தபால் பார்சல் பரிசோதனை

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளை அடுத்து தபால் திணைக்களம் உள்ளூர் வெளிநாடுகளுக்கான பார்சல் பொதிகளை ஏற்கும் விடயத்தில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி தபால் பார்சல்கள் பொதி செய்வதற்கு முன் பதாக, தபால் அதிபர்களின் அல்லது சம்பந்தப்பட்ட தபால் அலுவலக உத்தியோகத்தர்கள் பரிசோதனைக்கு அவை உட்படுத்தப்படும் என்று தபால் மா அதிபர் (4-ம் பக்கம் பார்க்க)

### இராணுவ தளபதி வட-கிழக்கு விஜயம்

(கொழும்பு)

புதுவருடப் பரிசுப் பொருட்களை எடுத்துக்கொண்டு வடகிழக்கு யுத்த முனைகளில் உள்ள படையினரை சந்திப்பதற்கு இராணுவத்தளபதி ஜெனரல் டி சில்வா செல்லவிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை படையினரின் சேவா வனிதா இயக்கத்தின் தலைவியான திருமதி ஜெனிவா டி சில்வாவும் வேறு சிலரும் அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், வெற்றிலைக் (4-ம் பக்கம் பார்க்க)

### அராலிக் கடலில் சினைப்பர் தாக்குதல்

#### மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அராலிக் கடற்பிரதேசத்தில் நேற்று அதிகாலை நாலு மணிக்கு மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்களை நோக்கி காரைநகர் இராணுவ முகாம் இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலினால் மீன்பிடி வள்ளத்தில் இருந்தவர்களில் ஒருவர் விரைப்பகுதியில் படுகாயமடைந்தார்.

சினைப்பர் தாக்குதல் மேற்கொண்ட சமயம் மீனவர்களை நோக்கி சோல்லை பாய்ச்சியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் சாவற்கட்டு, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அழகநாதன் ஜெயசுந்தர் (வயது 19) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

### இளாலி பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

இளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

### முகமாலை யாழ். விஜயம் ஒருபோதும் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

சபாநாயகர் ஜனாப் எம். எச் முகம்மட்டின் உத்தியோகபூர்வ யாழ் விஜயம் இனி ஒருபோதும் நடைபெறமாட்டாது. இது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. சபாநாயகருடன் நெருங்கிய (4-ம் பக்கம் பார்க்க)

### பாலியல் வன்முறைக்கு மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

சிறுமி மீது பாலியல் வன்முறை புரிந்த இளைஞர் ஒருவருக்கு கிளிநொச்சி தமிழீழ மாவட்ட நீதிமன்றம் நேற்று மரண தண்டனை தீர்ப்பு அறிவித்துள்ளது.

வட்டக்கச்சியைச் சேர்ந்த க. சிறீதரன் (21 வயது) என்ற இளைஞருக்கே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. இவர் 12 வயதுச்சிறுமி ஒருவரை அவரது சம்மதமின்றி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட (4-ம் பக்கம் பார்க்க)

## பிக்குகள் யாழ்.வர புலிகள் அனுமதி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு வர விருப்பம் தெரிவித்துள்ள பௌத்தபிக்குகளை முழுமனதுடன் தாம் வரவேற்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள் என்று பிக்கு முன்னணியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

### அரிசி நிர்ணய விலையை மீறுவோருக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டரிசியின் கட்டுப்பாட்டு விலையை மீறும் வர்த்தகர்கள் மீது இன்று தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிவித்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

